# ஆசிரியர் தேர்வு வாரியம்

அறிவிக்கை எண் : 01B/2026 நாள்: 12.05.2026

## ADDENDUM

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் வாயிலாக தமிழ்நாட்டில் அரசு / அரசு உதவி பெறும் / தனியார் பள்ளிகளில் தற்போது பணிபுரிந்து வருகின்ற ஆசிரியர்களுக்கான தமிழ்நாடு ஆசிரியர் தகுதித்தேர்வு அறிவிக்கை எண்.01/2026 இவ்வாரிய இணையதளத்தில் 13.02.2026 அன்று வெளியிடப்பட்டது.

இந்நிலையில், புதுச்சேரி அரசு, பள்ளிக்கல்வித் துறை செயலரின் நேர்முக கடித எண்.A/4719/2025-O/o Superintendent – DSE/E1, நாள்.30.03.2026இல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குட்பட்ட அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பணிபுரிந்து வருகின்ற ஆசிரியர்களுக்கு மேற்படி நடைபெறவுள்ள தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு-2026இல் பங்கேற்க அனுமதி கோரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுக் கடித எண்.2144/TRB/2026-2, நாள்.07.04.2026 மற்றும் 30.04.2026இல் வழங்கப்பட்டுள்ள அனுமதியின் அடிப்படையில், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குட்பட்ட அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் தற்போது பணிபுரிந்து வருகின்ற தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு மட்டும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கையின்படி நடைபெற உள்ள தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள்-I மற்றும் தாள்-IIற்கு இவ்வாரிய இணையதளத்தில் (www.trb.tn.gov.in) விண்ணப்பிக்க **13.05.2026** முதல் **27.05.2026** வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது. இத்தகுதித் தேர்வு சார்ந்த கூடுதல் விவரங்கள் மேற்கண்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுச்சேரி அரசு, பள்ளிக் கல்வித்துறை செயலரின் நேர்முக கடித எண்.M-17076 (76)/33/2026-Academic Wing-JD/DSE, நாள்.11.05.2026இன்படி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்குட்பட்ட பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் இவ்வாரியத்தால் நடத்தப்படும் சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் பங்கேற்கவும், தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண்கள் புதுச்சேரி அரசிற்கு வழங்கவும் கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வறிவிக்கை எண் 01B/2026, 12.05.2026 அன்று வெளியிடப்படுகின்றது.

தலைவர்

Downloaded from AIJobAlert.com · Verify all details on the official website.